# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2141/92 - 2019 සැප්තැම්බර් මස 22 වැනි ඉරිදා - 2019.09.22

*2141/92 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல் சட்டம்***

*8 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை 2141/ 25 ஆம் இலக்க, 2019 செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன், அக்கட்டளை வெளியிடப்பட்ட நாளான 2019.09.18 ஆந் திகதிக்கும் பெயர்குறித்த நியமன நாளான 2019.10.07 ஆந் திகதிக்கு முன்னைய நாளான 2019.10.06 ஆந் திகதி நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முன்னர் அல்லது அதற்கிடைப்பட்ட காலப்பகுதியினுள் கடமை நாட்களில் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையும், 2019.10.06 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் மு. ப. 8.30 மணி முதல் நண்பகல் 12.00 மணிக்கும் இடையில் சனாதிபதித் தேர்தலுக்காக வேட்பாளரொருவரினால் அல்லது வேட்பாளர் சார்பாக வேறொருவரினால்,*

(அ) அந்த வேட்பாளர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரொருவராயின், செல்லுபடியான பணத்தால் ஐம்பதாயிரம் ரூபாவும்,

(ஆ) அந்த வேட்பாளர் வேறேதும் அரசியற் கட்சியொன்றினால் அல்லது வாக்காளரொருவரினால் பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்ட வேட்பாளரொருவராயின், செல்லுபடியான பணத்தால் எழுபத்தையாயிரம் ரூபாவும்,


1A - PG 4558 — 267 (2019/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தேர்தல் ஆணைக்குழுவிடம் அல்லது குறித்த கடமைக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள எவரேனுமொருவரிடம் அல்லது இராஜகிரிய, சரண மாவத்தையில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிடுதல் வேண்டும். அல்லது வைப்பிலிட செய்வித்தல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

கொழும்பு,
2019, செத்தெம்பர் 22.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.